# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 23.03.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எல்லையற்ற மகிழ்ச்சிக்கும் பரக்கத்திற்குமுரிய நாள் ஆகும். இதில் ஜுமுஆவுடைய அருளும் இணைந்துள்ளது. ஏனென்றால் இன்றைய நாள், இன்றிலிருந்து ஏறக்குறைய 123 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தின் இரண்டாவது மறுமலர்ச்சியைப் பற்றிய திருக்குர்ஆனின் மாபெரும் முன்னறிவிபபு நிறைவேறிய நாள் ஆகும். இதனைப் போன்றே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு, அவர்கள் கூறிய விளக்கங்களுடன் நிறைவேறியது; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை நிறைவேறியது. மேலும் பைஅத் ஆரம்பித்ததுடன் முன்னவர்களுடன் இணையக்கூடிய ஆகரீன்களுடைய ஜமாஅத் நிறுவப்பட்டது. மேலும் நாமும் இதிலிருந்து பலன்பெறக்கூடிய நற்பேறு பெற்ற மக்களுடன் இணைந்துள்ளோம்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததாக வாதம் புரியக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் இந்த விஷயத்தை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வரக்கூடிய மிகப்பெரிய பொறுப்பை நம் மீது சுமத்துகிறது.

இஸ்லாத்தின் இரண்டாவது மறுமலர்ச்சி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் தொடங்கியது. மேலும் அது அன்னாரை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் தம்மிடம் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இதன் மூலம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சார்ந்துள்ள பரக்கத்துகளிலிருந்து பலன் பெற வேண்டும்.

எனவே ஒவ்வொரு வருடமும் மார்ச் 23 ஆம் தேதி வரும்போது அஹ்மதிகளாகிய நாம் இன்று மஸீஹ் மவ்வூது தினம் கொண்டாட வேண்டும் என்பதில் மட்டும் மகிழ்ச்சி அடையக் கூடாது அல்லது அல்ஹம்துலில்லாஹ்! நாம் இந்த ஜமாஅத்தில் இணைந்து விட்டோம் என்ற அளவில் மட்டும் மகிழ்ச்சி அடையக் கூடாது.

ஜமாஅத்தின் ஆரம்ப வரலாறு மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதத்தை நாம் புரிந்து கொண்டோம் என்பது மட்டும் போதாது. அல்லது அதற்காக கூட்டங்களை நடத்தி விட்டோம் என்பது மட்டும் போதாது. மாறாக, இதனை விட அதிகமாக நாம் இந்த பைஅத்திற்கு என்ன உரிமையை நிறைவேற்றியுள்ளோம் என்பதை பார்க்க வேண்டும். இன்று நம்மை ஆராய வேண்டிய, கணக்கெடுக்க வேண்டிய நாளும் ஆகும். பைஅத்தின் எதிர்பார்ப்புகளை ஆராய வேண்டிய நாளும் ஆகும். பைஅத்தின் நிபந்தனைகளின் மீது கவனம் செலுத்த வேண்டிய நாளும் ஆகும். தனது வாக்குறுதியினை புதுப்பிக்க வேண்டிய நாளும் ஆகும். பைஅத் நிபந்தனைகளின்படி செயல்படுவதற்கு ஒரு உறுதி எடுக்க வேண்டிய நாளும் ஆகும். இறைவனுடைய வாக்குறுதிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நிறைவேறுவதுடன் இறைவனை எண்ணிலடங்கா தஸ்பீஹ் மற்றும் தஹ்மீது செய்ய வேண்டிய நாளாகும். அதே சமயம் இறைநேசர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான ஸலவாத் ஓத வேண்டிய நாளாகும்.

எனவே இந்த முக்கியத்துவத்தை எப்போதும் நாம் முன்னிறுத்த வேண்டும். மேலும் இந்த முக்கியத்துவம் பைஅத் நிபந்தனைகளின் மீது கவனம் செலுத்துவது மற்றும் அதன்படி செயல்படுவது ஆகியவற்றைச் சார்ந்ததாகும். இந்த விஷயத்தை நினைவூட்டும் வகையில் மீண்டும் நான் உங்கள் முன்பு பைஅத் நிபந்தனைகள் மற்றும் இந்த நிபந்தனையின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்களுடைய வார்த்தைகளில் சில விளக்கங்களை எடுத்துரைப்பேன். பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையக்கூடியவர் தான் அமல் செய்வதாக வாக்குறுதி

அளிக்கக்கூடிய முதல் நிபந்தனை இதுவாகும். அதாவது, பைஅத் செய்யக் கூடியவர் உளப்பூர்வமாக இந்த வாக்குறுதியினை அளிக்க வேண்டும். அதாவது நான் கபரில் நுழையும் வரை இறைவனுக்கு இணை வைத்தலை விட்டு தவிர்ந்து இருப்பேன் என்பதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

வெறும் வாயளவில் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறிவிட்டு உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகளை வைத்திருப்பது தவ்ஹீது ஆகாது. மாறாக ஒரு மனிதர் தனது எந்தவொரு வேலைக்கு, திட்டத்திற்கு, சூழ்ச்சிக்கு, தந்திரத்திற்கு இறைவனுக்கு கண்ணியமளிப்பது போன்று கண்ணியம் அளித்தார் என்றால், அல்லது ஏதாவது ஒரு மனிதர் மீது இறைவன் மீது மட்டுமே வைக்க வேண்டிய நம்பிக்கையைப் போன்று நம்பிக்கை வைத்தார் என்றால், அல்லது இறைவனுக்கு அளிக்க வேண்டிய கண்ணியத்தை தனக்கு கொடுத்தார் என்றால், இந்த அனைத்து வகையும் இறைவனின் பார்வையில், அவர் சிலை வணங்கி ஆவார். தங்கம், வெள்ளி, பித்தளை அல்லது கற்களைக் கொண்டு செய்யப்பட்டவை மட்டும் சிலைகள் கிடையாது. அதன் மீது நம்பிக்கை வைப்பது மட்டும் கிடையாது. மாறாக இறைவனுக்கு கொடுக்க வேண்டிய கண்ணியத்தை உரிமையைப் போன்று கண்ணியம் அளிக்கக்கூடிய ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும் இறைவனது பார்வையில் சிலை ஆகும்.

நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் நாம் ஏற்றுக் கொள்ளுமாறு விரும்பக்கூடிய உண்மையான தவ்ஹீது, மேலும் எதனை ஏற்றுக் கொள்வதன் மூலம் இரட்சிப்பு கிடைக்க முடியுமோ அது இதுவாகும். அதாவது, இறைவனை தன்னளவில் எல்லா விதமான இணையிலிருந்தும் விடுபட்டவனாக கருதுவது ஆகும். அது சிலையாக இருந்தாலும், சந்திரனாக இருந்தாலும் அல்லது தனது நஃப்ஸ் ஆக இருந்தாலும் அல்லது சூழ்ச்சி, தந்திரம் போன்ற எல்லாவற்றையும் தாழ்வானதாகக் கருதுவதும், அவனுக்கு எதிரில் எந்தவிதமான திட்டங்களைத் தீட்டாமல் இருப்பதும், அவனைத் தவிர வேறவரையும் ராஸிக் ஆக ஏற்காமல் இருப்பதும் ஆகும். அவனுக்கெதிரில் எவரையும் நமக்கு கண்ணியம் அளிப்பவனாகவும் இழிவுபடுத்துபவனாகவும் கருதக் கூடாது. ஏனென்றால் இறைவன் தான் கண்ணியம் அளிக்கின்றான். இழிவையும் ஏற்படுத்துகின்றான். மேலும் எவரையும் அவனுக்கெதிரில் உதவியாளராக கருதக் கூடாது.

இரண்டாவது விஷயம், தனது நேசத்தை அவனிடம் மட்டுமே கொள்ள வேண்டும். தனது இபாதத்துகளை அவனுக்காக மட்டுமே செய்ய வேண்டும். தனது மன்றாடலை அவனிடம் மட்டுமே வைக்க வேண்டும். தனது தேவைகளை அவனிடம் மட்டுமே கேட்க வேண்டும். அவனுக்கு மட்டுமே பயப்பட வேண்டும். எனவே, எந்தவொரு தவ்ஹீதும், இந்த மூன்று முக்கிய அம்சங்கள் இல்லாமல் முழுமை பெற முடியாது. அந்த மூன்று முக்கிய அம்சங்கள் யாவை?

கூறுகின்றார்கள்: தான் என்ற நிலையில் இறைவனுக்கு எதிரில் எல்லாவற்றையும் ஒன்றுமற்றதாகக் கருத வேண்டும். அதாவது உலகில் இருக்கக்கூடியவைகள் ஒன்றுமே கிடையாது என்பதும் உலகில் இருக்கக்கூடிய ஒவ்வொன்றும் அழியக்கூடியவையும் தன்னளவில் ஒரு பொருட்டே இல்லாதவையும் ஆகும். இறைவனுக்கு எதிரில் அவற்றிற்கு எந்த உண்மையும் இல்லை. அவை பொய்களாகும் என்பதாகும்.

இரண்டாவது, பண்புகளின் அடிப்படையில் தவ்ஹீது அதாவது ரூபூபிய்யத், உலூஹிய்யத், படைத்துக் காத்தோம்பும் பண்பு மற்றும் இறைபண்புகளை மற்ற எவருக்கும் கொடுக்காமல் இருப்பது அதாவது நமது ரப் நமது இறைவன் மட்டுமே ஆவான். அவன் தான் நம்மை காத்தோம்புகின்றான். மேலும் அவனுக்கு மட்டும் தான் இறை சக்தி இருக்கின்றது. அவன் தான் அனைத்து சக்திகளுக்கும் ஊற்று ஆவான். மேலும் எவர்கள் வெளிப்படையில் காப்பாளர்களாகவும், நன்மை பயக்கக்கூடியவர்களாகவும் தென்படுகின்றார்களோ அதாவது பல வகையில் காத்தோம்பக் கூடியவர்களாகவும், எவர்களிடமிருந்து நன்மைகள் பெறுகின்றோமோ இவைகள் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என கருத வேண்டும். உலகத்தில் யாரிடமிருந்து நமக்கு பயன்கள் கிடைக்கின்றதோ இம்மக்கள் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் ஆவார்கள். இது அல்லாஹ்வின் அமைப்பின் ஒரு பகுதியாகும்.

மூன்றாவது, தனது அன்பு, உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் அன்பு போன்றவற்றிலும் இறைவழிபாட்டிலும் இறைவனுக்கு எதிரில் மற்றவர்களை இணையாக்கக் கூடாது. அவனிடமே நம்மை மாய்த்துக் கொள்ள வேண்டும். இறைவணக்கம் அல்லாஹ்வுக்காக மட்டுமே இருக்க வேண்டும்.

பைஅத்தின் இரண்டாவது நிபந்தனையாவது, பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமை, தீமை, அநீதி இழைத்தல், நம்பிக்கைத் துரோகம், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து இருக்க வேண்டும். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலோங்க விடாது அடக்கிக் கொள்வேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனவே அசல் விஷயம் என்னவென்றால், உண்மை பேசுவதை விட்டும் தன்னை விலக்கக்கூடிய எண்ணங்களை விட்டு மனிதன் விலகாத வரை உண்மையாளர் என அழைக்கப்பட மாட்டார். ஏனென்றால் மனிதன் தனக்கு பாதிப்பு ஏற்படாத விஷயத்தில் உண்மையைப் பேசுவதும், தனது கண்ணியம், பொருள், உயிர் போன்றவற்றிற்கு இழப்பு ஏற்படும்போது பொய் பேசுகிறார் என்றால், உண்மையை பேசாமல் அமைதியாக இருக்கின்றார் என்றால் அவருக்கு பைத்தியக்காரன், சிறுபிள்ளைகளை விட என்ன மேன்மை இருக்கிறது?

கூறுகின்றார்கள்: உலகத்தில் எந்த விதமான தூண்டுதலும் இல்லாமல் தேவையில்லாமல் பொய் சொல்லக்கூடியவர் எவரும் இருக்க மாட்டார். எனவே பாதிப்பின் போது விடக்கூடிய உண்மை, உயர்ந்த நல்லொழுக்கத்தில் ஒருபோதும் இணைய முடியாது. உண்மை பேச வேண்டிய பொருத்தமான இடம், சந்தர்ப்பம் எதுவென்றால் தமது உயிர், தனது பொருள், தனது கண்ணியம் ஆகியவற்றிற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய தருணமாகும்.

*இதில் இறைவனது போதனை என்னவென்றால், நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். (22:31)*

*சாட்சிகள் (உண்மைக்காக சாட்சி கூற அழைக்கப்பட்டால்) அவர்கள் மறுக்கக் கூடாது. (2:283)*

*நீங்கள் சாட்சியத்தை மறைக்கக் கூடாது. அதை மறைப்பவரின் உள்ளம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகிறது. (2:284)*

*நீங்கள் பேசும் போது அது உறவினர் (குறித்து) ஆக இருப்பினும் நேர்மையைக் கடைபிடியுங்கள. (6:153)*

*நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (4:136)*

*ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். (5:9)*

உண்மை பேசும் ஆண்களுக்கும், உண்மை பேசும் பெண்களுக்கும் உரிய நற்கூலி அவர்களின் இறைவனிடம் உள்ளது. உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுகின்றனர். மேலும் பொறுமையை வலியுறுத்துகின்றனர். அவர்கள் பொய் சாட்சி கூறமாட்டார்கள்.

இரண்டாவது நிபந்தனையில் பல விஷயங்கள் இருக்கின்றன.

கூறுகின்றார்கள்: விபச்சாரத்தின் பக்கம் நெருங்காதீர்கள். அதாவது உள்ளத்தில் இதுபோன்ற எண்ணங்களை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளிலிருந்து தூரம் விலகி விடுங்கள். மேலும் இந்த பாவம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய பாதைகளைக் கடைபிடிருக்காதீர்கள். விபச்சாரம் செய்யக் கூடியவன் தீமையை அதன் எல்லை வரை எட்ட வைத்து விடுகின்றான். இன்றைய காலத்து டி.வி நிகழ்ச்சிகள், சில

சேனல்கள், இண்டர்நெட் போன்றவைகள் இதுபோன்ற தீமைகளின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்கின்றது. பார்வையிலும் ஒரு விபச்சாரம் இருக்கின்றது. அதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். தீமையின் பக்கம் அழைத்துச் செல்லக்கூடிய ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

கூறுகின்றார்கள்: விபச்சாரத்தின் பாதைகள், மிகவும் மோசமானதாகும். அது இலக்கை அடைவதை விட்டும் தடுக்கின்றது. மேலும் உங்களுடைய கடைசி இலக்கை எட்டுவதற்கு இது மிகவும் எதிரானதாகும். உங்களுடைய இலக்கு எதுவாக இருக்க வேண்டும்? அது இறைவனது விருப்பமாக இருக்க வேண்டும். இதுதான் உங்களது கடைசி இலக்கு ஆகும். இதை அடையும் வழியில் தான் விபச்சாரம் என்ற தீமை தடையாக நிற்கும்.

பிறகு இரண்டாவது நிபந்தனையில் மற்ற விஷயங்களில் தீய பார்வை என்ற தீமையும் கூறப்பட்டுள்ளது. அதனைப் பற்றி கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மனித இயல்பின் தேவைகள், பலவீனங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சூழ்நிலைக்கேற்ப போதனைகளை வழங்குகின்றது. எவ்வளவு அழகான போதனை வழங்கியிருக்கின்றது.

நீர் நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுவீராக! அவர்கள் தனது பார்வையினை தாழ்த்திக் கொள்ளட்டும். மேலும் துவாரங்களைப் பாதுகாக்கட்டும். இது எப்படிப்பட்ட அமல் என்றால் இதன் மூலம் அவர்களது நஃப்ஸ் தூய்மை பெறும்.

ஃபுருஜ் (துவாரங்கள்) என்பது வெட்கஸ்தலங்கள் மட்டும் கிடையாது. மாறாக ஒவ்வொரு துளைகளும் அடங்கும். இதில் தடுக்கப்பட்ட பெண்களின் பாடல்களைக் கேட்பதும் தடுக்கப்பட்டுள்ளது.

பிறகு, நினைவில் கொள்ளுங்கள்! ஆயிரக்கணக்கான அனுபவங்கள் மூலம் இது நிரூபிக்கப்பட்டதாகும். அதாவது எந்த விஷயங்களிலிருந்து இறைவன் தடுக்கின்றானோ இறுதியில் மனிதன் அதிலிருந்து தவிர்ந்து இருக்கும் கட்டாயம் ஏற்படுகிறது.

மேலும் கூறுகின்றார்கள்: இஸ்லாம் இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதை ஆண், பெண் இரு சாராருக்கும் கட்டாயப்படுத்தி உள்ளது. பர்தாவைப் பேண கட்டளை எவ்வாறு பெண்களுக்கு உள்ளதோ அதே போன்று ஆண்களுக்கும் உறுதியான கட்டளை உள்ளது. பார்வையைத் தாழ்த்திக் கொள்வது, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ், ஹலால் மற்றும் ஹராம் பற்றிய பாகுபாடு, இறைவனுடைய கட்டளைக்கு எதிரில் தனது பழக்கவழக்கம், சடங்கு, சம்பிரதாயங்களை விட்டு விடுவது போன்றவைகள் எப்படிப்பட்ட கடமைகள் என்றால் இதில் இஸ்லாத்தின் வாசல்கள் மிகவும் குறுகியதாக உள்ளது. இதற்கு காரணம் ஒவ்வொருவரும் இந்த வாசலில் நுழைய வேண்டும் என்பதேயாகும்.

கட்டுப்படாமை, தீமைகள் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பதைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:

இறைவனுக்குக் கட்டுப்படாமை, மற்றும் தீமைகள எல்லை மீறிய போது, அதாவது முஸ்லிம்கள் அல்லது மறற மதத்தினர்கள் தீமைகளில் எல்லை மீறியபோது, இறைவனுடைய கட்டளைகளையும் இறை அடையாளங்களையும் அவர்கள் அவமதித்தபோது உலக இன்பங்களில், அதன் அலங்காரத்தில் அவர்கள் மூழ்கிய போது அவர்களை ஜெங்கிஸ்கான் போன்றவர்களைக் கொண்டு அழிக்கச் செய்தான். அப்பொழுது வானத்திலிருந்து சப்தம் வந்நது.

காஃபிர்களே! தீயவர்களை அழித்து விடுங்கள் என்ற ஓசை வந்தது. ஆக, கட்டுப்படாத தீய மக்கள், இறைவனது பார்வையில் காஃபிர்களை விட மோசமான வெறுக்கத்தக்கவர்கள் ஆவார்கள். பிறகு குழப்பங்களிலிருந்து தவிர்ந்திருப்பதைப் பற்றி கூறுகின்றார்கள். இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்தில் இணைந்து விட்டீர்கள் என்பதற்காக உங்களை விட்டுச் சென்று, உங்களிடம் இருந்து பிரிந்தவர்களிடம் நீங்கள் குழப்பம் செய்யாதீர்கள். மாறாக அவர்களுக்காக மறைவான முறையில் துஆக்களைச் செய்யுங்கள். அல்லாஹ் தனது அருளினால் உங்களுக்கு வழங்கியது போல அவர்களுக்கும் பார்வையையும், அறிவையும் வழங்குவானாக! நீங்கள் தூய்மையான முன்மாதிரி, நல்ல செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலமாக நீங்கள் சரியான பாதையினைத்தான் மேற்கொண்டுள்ளீர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள்.

பாருங்கள்! உங்களுக்கு மீண்டும் மீண்டும் வழிகாட்டுவதற்காகத்தான் நான் அனுப்பப்பட்டுள்ளேன். எல்லா விதமான குழப்பம், கிளர்ச்சி ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து இருங்கள். ஏச்சுப்பேச்சுக்களைக் கேட்டும் பொறுமையைக் கையாளுங்கள். தீமைக்கு நன்மை மூலமாக பதில் கொடுங்கள். மேலும் எவராவது குழப்பம் விளைவிக்க முயன்றால், அப்படிப்பட்ட இடத்திலிருந்து விலகி விடுவதே சிறந்ததாகும். மேலும் மென்மையுடன் பதில் கொடுங்கள்.

ஒரு நபர் நமது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருந்தும் கூட மற்றவருடன் சண்டையிட்டார் என நான் கேள்விப்படும் போது, இப்படிப்பட்ட செயலை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. மேலும் இறைவனும் உலகில் ஓர் முன்னுதாரணமாகத் திகழக்கூடிய இந்த ஜமாஅத், இறையச்சமில்லாத வழியினைப் பின்பற்றுவதனை விரும்பமாட்டான். மாறாக நான் உங்களுக்கு இதனையும் கூறிக் கொள்கிறேன். அல்லாஹ் இந்த விஷயத்திற்கு எந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளான் என்றால் அதாவது ஒரு நபர் இந்த ஜமாஅத்திலிருந்து கொண்டு பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை மேற்கொள்ள வில்லையென்றால் அவர் நினைவில் கொள்ளட்டும். அந்த மனிதர் இந்த ஜமாஅத்தில் இணைந்தவர் அல்லர். நீங்கள் மிகவும் அதிகமாக கோபப்படுவதற்கும் உணர்ச்சி வசப்படுவதற்கும் இதுதான் காரணமாக இருக்க முடியும். அன்னார் தன்னைப் பற்றி கூறுகின்றார்கள். அதாவது மக்கள் என்னை மிகவும் மோசமாக ஏசிப்பேசுவதை நீங்கள் கேட்கின்றீர்கள். அதுபோன்ற சமயத்தில் இந்த விஷயத்தை இறைவன் முன்பு வைத்து விடுங்கள். இதனை நீங்கள் முடிவு செய்யக் கூடாது. என்னைப் பற்றிய விஷயங்களை இறைவனிடம் விட்டு விடுங்கள். நீங்கள் இந்த தீய சொற்களை கேட்கும்போது கூட எதிரிகளுக்கு எதிராக பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை மேற்கொள்ளுங்கள்.

இதுதான் பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்கு கூறப்படுகின்றது. ஏனென்றால் அங்குள்ள மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் மோசமான கெட்ட வார்த்தைகளைக் கூற ஆரம்பித்து விட்டனர். இதற்கான ஒரே தீர்வு துஆ செய்வதாகும். அதிகமாக துஆ செய்வதாகும்.

**பிறகு அன்னார் மன உணர்ச்சிகளிலிருந்து விலகியிருப்பது பற்றி கூறுகின்றார்கள்:**

அறிவு மற்றும் மனசாட்சி சாட்சி பகர்கின்ற விஷயங்களையும், இறைவனுடைய வேதம் சாட்சி கூறகின்றவற்றையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

கூறுகின்றார்கள்: விபச்சாரம் செய்யாதீர்கள். பொய் கூறாதீர்கள். தீய பார்வை பார்க்காதீர்கள். கட்டுப்படாமை, தீமை, அநீதியிழைத்தல், நம்பிக்கைத் துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தால் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் மன உணர்ச்சிகளை மேலோங்க விடாதீர்கள். ஐவேளை தொழுகைகளை தொழுங்கள். ஏனெனில் மனிதனுடைய இயல்பில் ஐந்து வகையான புரட்சிகள் ஏற்படுகின்றன. மேலும் நமது நபி (ஸல்) அவர்களுக்கு நன்றி உள்ளவர்களாகத் திகழுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுங்கள். ஏனென்றால் அன்னார் தான் இருண்ட காலத்திற்குப் பிறகு புதிதாக இறைவனை அடையக் கூடிய வழியினை காட்டி தந்தார்கள்.

**பைஅத்தின் மூன்றாவது நிபந்தனை.**

இறைவனின் கட்டளையின்படியும், அவனுடைய தூதரின் கட்டளையின்படியும் ஐவேளை தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். மேலும் இயன்றவரை தஹஜ்ஜுத் தொழுகை தொழுவது, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுதல், தினமும் பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்பு கேட்டல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுதல், இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனைத் தினமும் புகழ்ந்து வருவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்களே! தன்னை எனது ஜமாஅத்தில் இணைந்ததாக கருதக்கூடியவர்களே! நீங்கள் உண்மையில் தக்வாவின்படி செல்லும் போதுதான் விண்ணில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக கருதப்படுவீர்கள். எனவே

நீங்கள் உங்களுடைய ஐவேளை தொழுகைகளை இறைவனைப் பார்ப்பது போன்று அச்சத்துடனும் உருக்கத்துடனும் தொழுங்கள். மேலும் நோன்புகளை இறைவனுக்காக உண்மையுடன நிறைவேற்றுங்கள். ஸக்காத்திற்கு தகுதியானவர்கள் ஸக்காத்தினைக் கொடுக்க வேண்டும். மேலும் ஹஜ் கடமையாக்கப்பட்டுள்ளவருக்கு எந்த தடையுமில்லை எனில் அவர் ஹஜ் செய்ய வேண்டும். எல்லா வகை நன்மையினையும் நிதானமாக செய்யுங்கள். மேலும் தீமையை வெறுத்தவாறு ஒதுக்குங்கள். உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். தக்வாயில்லாமல் செய்யக்கூடிய எந்த செயலும் இறைவன் வரை சென்றடைவதில்லை. ஒவ்வொரு நன்மையின் ஆணி வேர் தக்வா ஆகும். எந்த அமலில் இந்த ஆணி வேர் கெடாமல் இருக்குமோ அந்த அமல் வீணாகாது.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

தொழுகை எப்படிப்பட்டதென்றால், இதன் மூலம் வானம் மனிதன் பக்கம் குனிந்து நிற்கும். அதாவது தொழுகையின் உரிமையை நிறைவேற்றினோம் என்றால் அல்லாஹ் மிக அருகில் வந்து விடுவான். தொழுகையுடைய உரிமையை நிறைவேற்றக் கூடியவன் நான் மரணித்து விட்டேன் என நினைக்கும் போது அவனுடைய ரூஹ் உருகி இறைவனுடைய சன்னதியில் விழுந்து விடும். எந்த வீட்டில் இதுபோன்ற தொழுகை இருக்குமோ அந்த வீடு ஒருபோதும் பாழாகாது.

ஹதீஸில் வருகிறது: ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்கள் காலத்தில் தொழுகை இருந்திருந்தால் அந்த சமுதாயம் ஒருபோதும் அழிந்திருக்காது. ஹஜ் செய்வதற்கும் நிபந்தனை உள்ளது. நோன்புக்கும் நிபந்தனை உள்ளது. ஸக்காத்திற்கும் நிபந்தனை உள்ளது. ஆனால் தொழுகைக்கு நிபந்தனை எதுவும் கிடையாது. மற்ற அனைத்தும் வருடத்தில் ஒருமுறை தான். ஆனால் இதற்கான கட்டளை ஒவ்வொரு நாளும் ஐவேளை தொழுவதாகும். எனவே எதுவரை முழுமையான முறையில் தொழுகை இருக்காதோ அதுவரை அதில் கிடைக்கக்கூடிய பரக்கத்தும் கிடைக்காது. மேலும் இந்த பைஅத்திலிருந்து எந்த பலனும் கிடையாது.

**தஹஜ்ஜுத் தொழுகை பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:**

இரவுகளில் எழுங்கள்; துஆ செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு தனது வழியினைக் காட்டுவான். ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களுடைய சஹாபாக்களும் படிப்படியாகத்தான் தர்பிய்யத் பெற்றார்கள். அவர்கள் ஆரம்பத்தில் எவ்வாறு இருந்தார்கள்? ஒரு விவசாயி விதையிட்டதைப் போன்று தான் இருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதற்கு நீர்பாய்ச்சினார்கள். அவர்களுக்காக துஆ செய்தார்கள். விதை நல்லதாக இருந்தது. நிலமும் தரமானதாக இருந்தது. பிறகு இந்த நீர்பாய்ச்சலினால் நல்ல கனிகள் தோன்றின. எவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சென்றார்களோ அவ்வாறே அவர்களும் சென்றார்கள். அவர்கள் பகல் இரவு என எதனையும் எதிர்பார்த்ததில்லை. நீங்கள் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். தஹஜ்ஜத்திற்கு எழுங்கள். துஆ செய்யுங்கள். உள்ளத்தை சரி செய்யுங்கள். பலவீனங்களை விட்டு விடுங்கள். இறை விருப்பத்திற்கேற்ப தனது சொல், செயலை மாற்றுங்கள்.

**பிறகு அன்னார் ஸலவாத் ஓதுவதைப் பற்றி கூறுகின்றார்கள்:**

மனிதன் உண்மையில் ஓர் அடிமை ஆவான். அடிமையின் பணி எஜமானனின் கட்டளைக்கேற்ப செயல்படுவதாகும்.

இதனைப் போன்று நீங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய அருளைப் பெற வேண்டும் என விரும்பினால் உறுதியாக நீங்கள் அன்னாருக்கு அடிமையாகி விடுங்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*நீர் கூறுவீராக! தமக்கே (பாவஞ் செய்து) அநீதியிழைத்துக் கொண்ட என் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் கருணைபற்றி நம்பிக்கை இழந்து விட வேண்டாம். **(39:54)***

இந்த இடத்தில் இபாதீ என்பதன் பொருள், அடிமையே ஆகும். படைப்பினங்கள் கிடையாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடியானாக ஆவதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது அவசியமாகும். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் எந்தவொரு கட்டளையும் மறுக்கக் கூடாது. அனைத்துக் கட்டளைகளையும் பேண வேண்டும்.

**பிறகு இஸ்திக்ஃபாரைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவனிடமிருந்து ஆற்றலை வேண்டும் போது அதாவது இஸ்திக்ஃபார் செய்யும் போது, ரூஹுல் குத்ஸின் உதவியுடன் அவர்களுடைய பலவீனங்களை களைய முடியும். இறைவனுடைய நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்கள் பாவங்களிலிருந்து தவிர்ந்து இருப்பதைப் போன்று, அவர்கள் பாவம் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்க முடியும். பாவம் செய்த மக்கள் இருந்தார்கள் என்றால் இஸ்திக்ஃபார் மூலம் அவர்கள் பாவத்தின் விளைவுகளிலிருந்து அதாவது தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். தவறுதலாக பாவம் செய்யப்பட்டதென்றால் இஸ்திக்ஃபார் மூலம் அவனுடைய தீய விளைவுகளிலிருந்து மனிதன் பாதுகாக்கப்படுவான். இறைவனது தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவான். ஏனென்றால் ஒளி வரும் போது இருள் நிலைத்து நிற்க முடியாது. பாவம் செய்து இஸ்திக்ஃபார் செய்யாதவர்கள், அதாவது இறைவனிடம் ஆற்றலை வேண்டாதவர்கள் இறைவனிடம் தனது பாவத்திற்குரிய தண்டனையைப் பெறுவார்கள்.

**பைஅத்தின் நான்காவது நிபந்தனை,** அதாவது, அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களுக்குப் பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் தனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ கைகளினாலோ வேறு வகையாலோ எவ்விதமான தகாத தொல்லையும் கொடுக்காமல் இருத்தல் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவைகளில் முதல் பண்பு அஃப்ஃப் ஆகும். அதாவது மன்னிப்பதாகும். பிறரது பாவங்களை மன்னிப்பதாகும். இதில் இன்னொரு அம்சம் என்னவென்றால், பாவம் செய்யக் கூடியவர் இன்னொருவருக்கு ஒரு கஷ்டத்தை ஏற்படுத்துகின்றார். மேலும் அநீதியிழைக்கப்பட்டவர் அவருக்கு அதே அளவு இழப்பை ஏற்படுத்துவதற்கு தகுதியானவராகவும் இருப்பார். அதாவது, தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கோ அல்லது கைது செய்வதற்கோ அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கோ அல்லது தானே அவரை நேரடியாக அடிப்பதற்கோ தகுதியானவராக இருப்பார். அப்போது அவரை மன்னிப்பது சிறந்ததென்றால் அவரை மன்னித்து விடுவது அவர் செய்யும் ஒரு நற்செயல் ஆகும்.

இதுபற்றி திருக்குர்ஆனின் போதனை என்னவென்றால், *மேலும் அவர்கள் கோபத்தை அடக்குபவர்களும் மக்களை மன்னிப்பவர்களும் ஆவர். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (3:135)*

மேலும் தீமைக்குரிய தண்டனை செய்யப்பட்ட தீமையின் அளவேயாகும். எவர் சீர்திருத்தத்தின் காரணமாக தீமை ஏற்படாத வகையில் பாவங்களை நன்மையின் அடிப்படையில் மன்னித்தார் என்றால் அதற்குரிய கூலியை அவர் பெறுவார்.

பிறகு கூறுகின்றார்கள்: மனிதன் பகட்டாக இருக்கக் கூடாது. வெட்கங்கெட்ட செயலை செய்யக் கூடாது. படைப்பினங்களுடன் மோசமாக நடந்து கொள்ளக் கூடாது. அன்பு மற்றும் நன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். தனது சுய நோக்கங்களுக்காக மற்றவர்களிடம் பொறாமை கொள்ளக் கூடாது. கடினம், மென்மை போன்றவற்றை தகுந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும்.

**தன்னடக்கத்தைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவனுடைய தண்டனை வந்து, தவ்பாவுடைய வாசலை அடைப்பதற்கு முன்பு தவ்பா செய்யுங்கள். உலகச் சட்டங்களின் அச்சத்தால் இந்த அளவு பயம் ஏற்படுகிறது என்றால், ஏன் இறைவனுடைய சட்டங்களைக்

கண்டு பயப்படுவதில்லை? துன்பம் தடையின் மீது வந்து நிற்கும் போது அதன் சுவையை சுவைத்துதான் ஆக வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தஹஜ்ஜுத் தொழுகைக்கு எழ வேண்டும். ஐவேளை தொழுகைகளிலும் குனூத்-ஐ சேர்க்க வேண்டும். இறைவனை கோபப்படுத்தக்கூடிய ஒவ்வொரு விஷயத்திலிருந்து தவ்பா செய்யுங்கள். தவ்பா என்பது எல்லா தீமைகளையும் இறைவனுக்கு விருப்பமில்லாத செயல்களை விட்டு விட்டு ஒரு உண்மையான மாறுதலை ஏற்படுத்த வேண்டும். மேலும் தொடர்ந்து முன்னேற வேண்டும். தக்வாவை மேற்கொள்ள வேண்டும். இதிலும் இறைவனுடைய கருணை இருக்கும். நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்ளுங்கள். கோபம் அடையாதீர்கள். தன்னடக்கம், தாழ்வை மேற்கொள்ள வேண்டும். நல்லொழுக்கச் சீர்திருத்தத்துடன் தனது தகுதிக்கேற்ப தருமங்கள் கொடுப்பதனையும் தொடருங்கள்.

*அவர்கள் அ(ந்த இறை)வன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியவர்களுக்கு உணவளிக்கின்றனர். (76:9)*

இறைவனுடைய விருப்பத்திற்காக ஏழைகள், அனாதைகள் பயணிகளுக்கு உணவளிக்கின்றனர். மேலும் கூறுகின்றார்கள்: இதனை இறை விருப்பத்திற்காக கொடுக்கிறோம். மிகவும் பயங்கரமான அந்த நாளுக்கு நாங்கள் அஞ்சுகின்றோம்.

இதன் சுருக்கம், துஆ மற்றும் தவ்பா ஆகியவற்றை கடைபிடியுங்கள். மேலும் ஸதக்காவினைக் கொடுத்து வாருங்கள். இதன் மூலம் அல்லாஹ் தனது அருள்களுடன் உங்களுடன் பரிமாறுவானாக! என்பதாகும்.

**அடுத்து, பைஅத்தின் ஐந்தாவது நிபந்தனை இதுவாகும்.**

அதாவது துக்கம், மகிழ்ச்சி, பணக்கஷ்டம், பண வசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள், அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும் இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகம் சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அதாவது மனிதர்களில் மேன்மையானவர்கள் இறைவழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள தனது உயிரை விற்று விடுகின்றனர். இறைவனுடைய விருப்பத்தினை ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது தனது உயிரை விற்று இறை விருப்பத்தை விலையாகப் பெறுகின்றனர். தனது உயிரைப் பற்றி கவலை அடையமாட்டார்கள். இவர்கள் மீது தான் அல்லாஹ்வின் ரஹ்மத் உள்ளது. இறைவன் இந்த வசனத்தில் கூறுகின்றான். வசனத்தினை அன்னார் இங்கு குறிப்பிடவில்லை. வசனத்திற்கு விளக்கமளிக்கிறார்கள்.

எனது வழியிலும், எனது விருப்பமான வழியிலும் உயிரை விற்பவரே எல்லா விதமான துக்கங்களிலிருந்தும் மீட்பு பெறுவார். மேலும் தனது முழு முயற்சிகளுடன் அவர் இறைவனைச் சேர்ந்தவர் என்பதற்கு சாட்சி பகர்கின்றார். மேலும் தன்னை இறைவனுக்கு கட்டுப்படக்கூடிய, படைப்பினங்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒரு பொருளாகவே கருதுவார்.

பிறகு இறைவனுடைய அன்பினைப் பெறுவதைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனுடைய அன்பிற்குரிய அடியார் தனது உயிரை இறைவழியில் தியாகம் செய்வார். இதற்குப் பதிலாக இறைவனுடைய விருப்பத்தினை பெறுவார்கள். இப்படிப்பட்ட மக்கள் தான் இறைவனுடைய சிறப்பிற்குரிய ரஹ்மத்திற்கு உரியவராவார்கள்.

ஒவ்வொரு மூஃமினுக்கும் இதே நிலைதான் இருக்கும். அவர்கள் நல்லொழுக்கம் மற்றும் விசுவாசத்துடன் அவனுக்காக ஆகும்போது, இறைவன் அவர்களுக்கு நண்பனாக ஆகி விடுகின்றான். ஒருவேளை ஈமானுடைய கட்டடம் பழைமையாக இருக்கிறது என்றால் பிறகு பாதிப்பு ஏற்படலாம் என்ற அபாயம்

உள்ளது. நாம் எவருடைய உள்ளத்தின் நிலையையும் அறியமாட்டோம். ஆனால் முழுமையாக இறைவனுக்காக ஆகும் போது இறைவன் அவர்களுக்கு ஒரு சிறப்பான பாதுகாப்பை ஏற்படுத்துகின்றான். அவன் அனைவருக்கும் இறைவன் ஆவான். ஆனால் எவர் தன்னைத்தானே இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறாரோ, அவர் மீது சிறப்பான தோற்றங்களை வெளிப்படுத்துகின்றான். இறைவனிடம் ஒப்படைத்தல் என்பது இதுதான். அதாவது, நஃப்ஸ் முழுவதுமாக நொறுங்கி அதன் எந்த பகுதியும் எஞ்சிவிடக் கூடாது என்பதாகும். இதனால்தான் நான் மீண்டும் மீண்டும் நமது ஜமாஅத்திற்கு கூறுகின்றேன். பைஅத் செய்து விட்டதில் பெருமை அடிக்காதீர்கள். உள்ளம் தூய்மையானதாக இல்லையென்றால் கையின் மீது கை வைப்பது எந்த நன்மையினை தர முடியும்? அதாவது பைஅத்திற்காக கையினை முன்னால் நீட்டுவதால் என்ன பலன் தரும்? ஆனால் உண்மையாக ஒப்புக் கொள்கின்றவருக்கு பெரிய பெரிய பாவங்கள் மன்னிக்கப்படும். அவருக்கு ஒரு புதிய வாழ்வு கிடைக்கிறது.

பிறகு **பைஅத்தின் ஆறாவது நிபந்தனை** இதுவாகும். சடங்கு சம்பிரதாயங்களில் இருந்தும் மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு இறைவனின் போதனையின்படியும் அவனது தூதரின் போதனையின்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையக ஆக்கிக் கொள்வேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்கு முன்பு நான் ஒரு ஹதீஸினை எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் ஒருவர் எனது சுன்னத்தில் ஒரு சுன்னத்தினை மக்கள் அமல் செய்யும் அளவிற்கு உயிர்ப்பிக்கிறார் என்றால் (இது ரஸூல் உடைய போதனை பற்றி கூறப்படுகின்றது) சுன்னத்தை உயிர்ப்பித்த மனிதருக்கும் அமல் செய்யக்கூடிய மக்கள் அளவுக்கு நன்மை கிடைக்கும். மேலும் மக்களுடைய நன்மையில் எந்தக் குறைவும் ஏற்படாது. மேலும் எவர் ஒருவர் பித்அத்தை உருவாக்கினாரோ மேலும் மக்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அந்த மனிதருக்கு அந்த பித்அத்தின்படி அமல் செய்யக் கூடிய மக்களின் பாவங்களின் பங்கு கிடைக்கும். மேலும் இந்த பித்அத்தின்படி அமல் செய்யக்கூடிய மக்களுடைய பாவங்களில் எந்தவித குறைவும் ஏற்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாருங்கள்! அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். *நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். (3:32)*

இறைவனுக்கு விருப்பமானவராக மாறுவதற்கு ரஸூல் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவது மட்டுமே வழியாக உள்ளது. உங்களுக்கு இறைவனுடன் இணைக்கக்கூடிய வேறு எந்த வழியும். இல்லை. மனிதனின் நோக்கம் இந்தவொரு ஈடிணையற்ற இறைவனை அடைவதாக இருக்க வேண்டும். ஷிர்க் மற்றும் பித்அத்துகளில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும். சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதும், மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதும் இருக்கக் கூடாது.

பாருங்கள்! நான் மீண்டும் கூறுகின்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான பாதையைத் தவிர வேறெந்த வகையிலும் மனிதன் வெற்றி பெற முடியாது. நமக்கு ஒரேயொரு ரஸூல் மட்டும்தான் உள்ளார். ஒரேயொரு குர்ஆன் மட்டுமே உள்ளது. அது இந்த ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது. இதனைப் பின்பற்றுவதன் மூலம் நாம் இறைவனைப் பெற முடியும். இன்றைய காலத்தில் புக்காஹ்க்களால் ஏற்படுத்திய வழிகள் தனிமை வாழ்வை மேற்கொள்பவர்கள் போன்றோரின் துஆக்கள் தரூது, வஸாயிப் போன்றைவகள் சரியான பாதையிலிருந்து மனிதனை தடுக்கக்கூடிய கருவிகள் ஆகும். எனவே நீங்கள் இதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காத்தமுன்னபிய்யீன் என்ற முத்திரையை உடைக்க விரும்பினார்கள். ஒரு வகையில் அவர்கள் ஒரு தனி ஷரீஅத்தையே உருவாக்கியுள்ளனர்.

நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கூற்றினைப் பின்பற்றுவதும், தொழுகை, நோன்பு மற்றும் சுன்னத் போன்ற அடிப்படை இல்லாமல் இறைவனுடைய அருள் மற்றும் பரக்கத்தின் வாசல்களை திறப்பதற்கு வேறெந்த சாவியும் இல்லை.

இந்த வழியினை விட்டு விட்டு வேறொரு வழியினை ஏற்படுத்தக் கூடியவர் தவறிழைத்தவர் ஆவார். இறைவன் மற்றும் அவனது ரஸூலுடைய கூற்றிற்கு கட்டுப்படாமல் வோறாரு வழியின் மூலமாக தேடுகின்றவன் தோல்வியுடன் மரணமடைவான்.

**பிறகு ஏழாவது நிபந்தனை இதுவாகும்.**

தற்பெருமையையும், அகம்பாவத்தையும் முற்றிலுமாக விட்டு விடுவேன். பணிவு, தன்னடக்கம், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை இவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.

**தற்பெருமையைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் உண்மையாகவே கூறுகின்றேன். மறுமையில் ஷிர்க்கிற்கு பிறகு தற்பெருமையைப் போன்ற வேறெந்த தீமையும் இல்லை. இது எப்படிப்பட்ட தீமை என்றால் ஈருலகிலும் மனிதனை இழிவுக்குள்ளாக்குகிறது. இறைவனுடைய கருணை ஒவ்வொரு ஏகத்துவவாதிக்கும் உதவி புரிகின்றது. தற்பெருமை கொள்பவனுக்கு அல்ல. இறைவனை ஒருவனாக கருதக்கூடியனுக்கு இறைவன் உதவி புரிகின்றான். அவனது பாவங்களை மன்னிக்கின்றான். ஆனால் தற்பெருமையை அல்லாஹ் மன்னிக்க மாட்டான.

கூறுகின்றார்கள்: ஷய்த்தானும் தன்னை ஏகத்துவவாதி என கூறிக் கொண்டிருந்தான். ஆனால் அவனது தலையில் தற்பெருமை இருந்தது. அவன் இறைவனுடைய பார்வையில் பிரியமானவராக இருந்த ஆதமை இழிவான பார்வையில் பார்த்தான். ஆதமைப் பற்றி குறை கூறினான். இதனாலேயே அவன் விரட்டப்பட்டான். மேலும் சாபத்திற்குரிய கழுத்துப்பட்டை அவனுக்கு அணிவிக்கப்பட்டது.

எனவே முதல் பாவம், இதன் மூலம் அழிக்கப்பட்டதற்கு காரணம் தற்பெருமை ஆகும்.

கூறுகின்றார்கள்: உங்களிடத்தில் ஏதாவது ஒரு வகையில் தற்பெருமை இருக்கும் என்றால், அல்லது நயவஞ்சகம் இருக்கம் என்றால் அல்லது சுயநலம் இருக்கும் என்றால் அல்லது சோம்பேறித்தனம் இருக்கும் என்றால் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதியானவர் இல்லை. நீங்கள் ஒரு சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு நாம் செய்ய வேண்டிதை செய்து விட்டோம் என எண்ணி, நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். ஆனால் இறைவன் உங்களிடத்தில் முழுமையாக ஒரு புரட்சி ஏற்பட வேண்டும் என விரும்புகின்றான். அவன் உங்களிடத்தில் ஒரு மரணத்தை நாடுகின்றான். அதற்குப் பிறகு அவன் உங்களை உயிர்ப்பிப்பான்.

**பிறகு மிஸ்கீன்களைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:**

நீங்கள் அல்லாஹ்வை தேட வேண்டும் என நினைத்தால் ஏழைகளின் உள்ளத்தின் அருகில் தேடுங்கள். இதனால்தான் நபிமார்கள் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார்கள். இதனைப் போன்றே பெரிய சமுதாயங்கள் சிறிய சமுதாயங்களைக் கண்டு ஏளனம் செய்யாதீர்கள். மேலும் எவரும் எனது குடும்பம் பெரியது என்று கூறாதீர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என்னிடம் வரும்போது நான் உங்களிடத்தில் உங்களுடைய சமுதாயம் எது எனக் கேட்கமாட்டேன்? பிறகு உங்களுடைய அமல்கள் என்ன? என்றுதான் கேட்பேன்.

இதனைப் போன்று தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மகளிடம் இவ்வாறு கூறினார்கள்: பாத்திமாவே! இறைவன் குடும்பத்தைப் பற்றி கேட்க மாட்டான். நீங்கள் ஏதாவது தவறான செயல் செய்தால் இறைவன் உங்களை ரஸூலின் மகள் என்பதற்காக உங்களை மன்னிக்கமாட்டான்.

எனவே நீங்கள் எந்நேரமும் வேலைகளைக் கவனமுடன் செய்து வாருங்கள்.

**பிறகு பைஅத்தின் எட்டாவது நிபந்தனை இதுவாகும்.**

மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்கு தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாம் உயிர் பெறுதவதற்கு நம்மிடம் ஒரு பரிகாரத்தை விரும்புகிறது. அது என்ன? நாம் இதன் வழியில் மரணிப்பதே ஆகும்.

இந்த மரணத்தில்தான் இஸ்லாத்தின் வாழ்வு இருக்கின்றது. முஸ்லிம்களின் வாழ்வு இருக்கின்றது. இதனைச் சார்ந்து தான் உயிருள்ள இறைவனின் தோற்றம் வெளிப்படுவதும் இருக்கின்றது.

இதற்கு மற்றொரு பெயர் இஸ்லாம் ஆகும். இந்த இஸ்லாத்தை உயிர்ப்பிக்க இறைவன் தற்போது விரும்புகின்றான். நிச்சயமாக இந்த நோக்கத்தை செயல்படுத்துவதற்காக எல்லா வகையிலும் சிறந்தவொரு திட்டத்தை தன்புறமிருந்து உருவாக்கினான். எனவே இந்த அடியானை இந்த நோக்கத்திற்காக அனுப்பி இருக்கின்றான். அன்னாருடைய நோக்கம் உலகத்தை சீர்திருத்துவதாகும். அன்னாரை ஏற்றுக் கொண்டுள்ள நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

**பிறகு பைஅத்தின் ஒன்பதாவது நிபந்தனை இதுவாகும்.**

அல்லாஹ்வின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவ தொடர்ந்து ஈடுபட்டு வருவேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும் அருள்களாலும் என்னால் முடிந்த வரை மனித குலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் நற்செயல்களை பெரிதும் விரும்புகிறான். அவனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என அவன் விரும்புகின்றான். ஒருவேளை அவன் தீமையை விரும்புபவனாக இருந்தால் தீமையைச் செய்யுமாறு கூறியிருப்பான். ஆனால் அல்லாஹ்வின் மகத்துவம் இதிலிருந்து தூய்மையானதாகும்.

எனவே என்னுடன் தொடர்பு கொண்டுள்ள நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்! எல்லாருடனும் அவர் எந்த மதத்தினைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அனுதாபம் காட்டுங்கள். பாகுபாடில்லாமல் அனைவருடனும் நன்மை செய்யுங்கள். இதுதான் திருக்குர்ஆனின் போதனையாகும்.

*அவர்கள் அ(ந்த இறை)வன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியவர்களுக்கு உணவளிக்கின்றனர். (76:9)*

இஸ்லாத்தின் அனுதாபத்தின் எல்லை யாது? எனது பார்வையில் முழுமையான நல்லொழுக்கப் போதனைகள் இஸ்லாத்தைத் தவிர வேறெங்கும் கிடைக்கப் பெறவில்லை.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:

எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. அன்றாடம் அவரிடம் இஸ்லாத்தின் போதனைக்கு மாற்றமான அந்த தவறு ஏற்பட்டது. இவரிடம் இந்த தவறு ஏற்பட்டது என நான் கேட்கும்போது அல்லது பார்க்கும் போது எனது உள்ளம் இதனால் மகிழ்ச்சி அடைவதில்லை.

கூறுகின்றார்கள்: நான் ஜமாஅத்தை தற்போது குழந்தையாகப் பார்க்கின்றேன். இரண்டு அடி எடுத்து வைத்தால் நான்கு முறை கீழே விழுகிறது. ஆனால் இதனை அல்லாஹ் முழுமைப்படுத்தி விடுவான் என நம்பிக்கை கொள்கிறேன். எனவே நீங்களும் உங்களது முயற்சி, திட்டங்கள், உழைப்பு மற்றும் துஆவில்

ஈடுபடுங்கள். இறைவன் அருள் புரிவானாக! அவனது அருளில்லாமல் எதுவும் நடக்காது. அவளது அருள் இறங்கும் போது எல்லா வழிகளையும் திறந்து விடுவான்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அவனது அடியார் மீது கருணை காட்டுங்கள். அவர்கள் மீது நாவு, கை, அல்லது வேறெந்த வகையிலும் அநீதியிழைக்காதீர்கள். உங்களுக்கு கீழுள்ளவர்களானாலும் யார் மீதும் ஆணவம் கொள்ளாதீர்கள். பெரியவர்களாக இருந்தீர்கள் என்றால் சிறுவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். ஆலிமாக இருந்தால் அறிவீனர்களுக்கு அறிவுரை வழங்குங்களை. அவர்களை கோபப்படுத்தாதீர்கள். வசதி படைத்தவராக இருநதால் ஏழைகளுக்கு தொண்டாற்றுங்கள். சுயநலத்தின் காரணமாக தற்பெருமை கொள்ளாதீர்கள். அழிவின் பாதைக்கு அஞ்சுங்கள்.

**பிறகு பைஅத்தின் பத்தாவது நிபந்தனை இதுவாகும்.**

அல்லாஹ்வுக்காக நல்ல விஷயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் நான் செய்துகொள்ளும் இந்த சகோதர உடன்படிககையில் மரணம் அடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை உயர்ந்ததாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்.

இந்த நபி அறிவுக்கு மாற்றமான விஷயங்களுக்கு கட்டளையிடவில்லை. (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பற்றி கூறுகின்றார்கள்) அதே போன்று அறிவு தடுக்கக்கூடிய அந்த விஷயங்களை தடுக்கின்றார். மேலும் அசுத்தமானவற்றை ஹராமாக்குகிறார். மேலும் அமுங்கிக் கிடந்த சமுதாயத்தின் தலையில் இருந்து அதன் சுமையை இறக்கி வைத்தார். மேலும் கழுத்துகளை நேராக வைக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்த கழுத்துப் பட்டைகளை அவர்களை விட்டும் விலக்கினார். எனவே யாரெல்லாம் அவர் மீது நம்பிக்கை கொள்வார்களோ மேலும் அவருடன் இணைந்து ஆற்றல் கொடுப்பார்களோ அவருக்கு உதவி புரிவார்களோ அவருடன் இறக்கப்பட்ட ஒளியினை பின்பற்றுவார்களோ உலகம் மற்றும் மறுமையில் கஷ்டங்களிலிருந்து விடுதலை பெறுவார்கள். இது ஷரீஅத்தின் கட்டளைகள் ஆகும். இவைகள் தான் சரியான கட்டளைகள் ஆகும். இதன்படி அமல் செய்வது அவசியமாகும். ஒரு மனிதருடைய உலக சுமைகளிலிருந்து விடுதலை பெறுவது இதைச் சார்ந்து தான் உள்ளது.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: எனது பக்கம் ஓடி வாருங்கள். எனது பக்கம் ஓடி வாருங்கள். தற்போது என்னை நோக்கி ஓடி வருபவரை நான் புயலின் போது சரியான நேரத்தில் கப்பலில் ஏற்றிய மனிதருக்கு ஒப்புமையாக கூறுவேன். ஆனால் எவர் என்னை ஏற்கமாட்டாரோ, நான் பார்க்கின்றேன். அவர் புயலில் தன்னை ஆழ்த்திக் கொள்கிறார். மேலும் தப்பிப்பதற்கான எந்தவிதமான வழியும் அவரிடம் இல்லை. உண்மையான ஷஃப்யீ பரிந்துரை செய்பவரின் நிழல் ஆவேன். அன்னாருடைய நிழலை அந்தக் காலத்து குருடர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மிகவும் இழிவுபடுத்தினார்கள். அதாவது அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அன்னார் கூறுகின்றார்கள். கடைசியில் நமக்கு அறிவுரை கூறியவாறு கூறுகின்றார்கள்: எனது அன்பர்களே! எனது பிரியமானவர்களே! எனது மரத்தின் பசுமையான கிளைகளே! எனது பைஅத்தில் இணைந்த உங்கள் மீது இறைவனுடைய ரஹ்மத் உண்டாகட்டுமாக! உங்களது வாழ்வு, வசதி, பொருள் போன்றவற்றைக் கொண்டு இந்த வழியில் தியாகம் செய்கின்றீர்கள். பிரியமானவர் யார் என்பதைப் பற்றி கூறுகின்றார்கள். எனது நண்பர் யார்? எனது பிரியமானவர்கள் யார்? என்னை அறிந்து கொள்பவரே எனக்கு பிரியமானவர் ஆவார். என்னை அறிந்தவர் யார்? நான் அனுப்பப்பட்டவன் ஆவேன் என்று என் மீது நம்பிக்கை வைப்பவரே என்னை அறிந்தவர் ஆவார். அனுப்பப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை போல் என்னை ஏற்றுக் கொள்பவரே என்னை அறிந்தவராவார். உலகம் என்னை ஏற்காது. ஏனென்றால் நான் உலகத்திலிருந்த வந்தவன் அல்ல. ஆனால் எவருடைய இயல்பில் மறுமையின் பங்கு கொடுக்கப்பட்டுள்ளதோ அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கின்றனர். ஏற்றுக் கொள்வார்கள். என்னை விட்டு விடுபவர் என்னை அனுப்பியவனை விட்டு விடுபவர் ஆவார். மேலும் என்னுடன் இணையக்கூடியவர் நான் எவனிடமிருந்து

வந்தேனோ அதனுடன் இணையக் கூடியவர் ஆவார். என்னுடைய கையில் ஒரு விளக்கு உள்ளது. எவர் என் பக்கம் வருவாரோ நிச்சயமாக அவர் அதிலிருந்து வெளிச்சம் பெறுவார். மேலும் எவர் தீய எண்ணம் கொண்டு தூர விலகிப்போவாரோ அவர் இருளில் விழுவார் இந்தக் காலத்தின் உறுதியான கோட்டை நான் ஆவேன். பாதுகாப்பில் வைக்கக்கூடிய கோட்டை நான் ஆவேன். எவர் ஒருவர் என்னில் நுழைவாரோ அவர் திருடர்களிடமிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும் தமது உயிரை காப்பாற்றிக் கொள்வார். ஆனால் எவர் எனது சுவற்றிலிருந்து தூர விலகியிருக்க விரும்புகின்றாரோ அவருக்கு எல்லா திசையிலிருந்தும் மரணம் உண்டாகும். அவனது சடலம் கூட காப்பாற்றப்படாது. என்னில் நுழையக் கூடியவர் தீமையை விடுபவராவார். நன்மையை மேற்கொள்ளக் கூடியவர் ஆவார். கோணல் தன்மையை விட்டு விடுபவரும், நேரான பாதையில் செல்பவரும் ஆவார். மேலும் ஷய்யத்தானின் அடிமையிலிருந்து விடுதலை பெறுவார். இறைவனுக்கு கட்டுப்படக்கூடிய ஒரு அடியானாக திகழ்வார். இவ்வாறு செயல்படக்கூடிய ஒவ்வொருவரும் என்னில் அடங்குவார்கள். நான் அவர்களில் உள்ளேன். ஆனால் இவ்வாறு செய்வதற்கு இறைவன் யாருக்கு தூய்மையான ஆன்மாவை வழங்குவானோ அவரால் தான் முடியும். அப்போது இறைவன் அந்த மனிதனின் நஃப்ஸின் நரகத்தினுள் தனது பாதத்தை வைத்து விடுவான். அப்போது அது எப்படி குளிர்ந்ததாக ஆகி விடுமென்றால் இதற்கு முன்பு அதில் நெருப்பு இல்லாதது போன்று ஆகி விடுகிறது. மனிதன் தூய்மையாகும் போது எந்த அளவு நஃப்ஸின் நெருப்பு இருந்ததோ அது குளிர்ந்து விடுகின்றது. அங்கு நெருப்பே இல்லாதது போன்று தோன்றும். அப்போது அவர் முன்னேற்றத்திற்கு மேல் முன்னேற்றம் அடைந்துகொண்டே செல்வார். எந்த அளவுக்கு என்றால் இறைவனது ரூஹ் அதில் தங்கி விடும். மேலும் சிறப்பான தோற்றத்தின் மூலம் ரப்புல் ஆலமீனுடைய இருப்பு அவரது உள்ளத்தில் ஏற்படும். அதாவது அல்லாஹ் அவரது உள்ளத்தில் தன் அர்ஷை நிலை நிறுத்துவான். அப்போது அவனுடைய பழைய மனிதத்தன்மை எரிந்து ஒரு புதிய தூய மனிதத்தன்மை அவருக்கு அளிக்கப்படும். இறைவனும் ஒரு புதிய இறைவனாக புதிய மற்றும் ஒரு சிறப்பான தொடர்பை அவனுடன் ஏற்படுத்துவான். சொர்க்கத்தினுடைய அனைத்து தூய்மையான பொருட்களும் இந்த உலகிலேயே அவருக்கு கிடைத்து விடும். எனவே இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனைகளும், எதிர்பார்ப்புகளும் ஆகும். இதன்படி அமல் செய்வதற்கு தான் அன்னார் நம்மிடம் நம்பிக்கை வைத்துள்ளார்கள். உண்மையான பைஅத் செய்யக்கூடிய தரமாக இதை நிர்ணயித்துக் கூறியுள்ளார்கள்.

எனவே இன்று நாம் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உண்மையில் நமது வாழ்வினை இந்த நிபந்தனையின் அடிப்படையில் கழிப்பதற்கு முயற்சி செய்கின்றோமா என்பதனை ஆராய வேண்டும். அல்லாஹ் நமது பலவீனங்களையும், தவறுகளையும் மன்னிப்பானாக! இவற்றை தூர விலக்குவானாக! மேலும் நம்முன் ஒரு தூய மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பினை வழங்குவானாக! நம்மிடம் ஏதாவது நன்மை இருக்கிறது என்றால் அதன் தரம் முன்பை விட மேலோங்கட்டுமாக. மேலோங்கி செல்லட்டுமாக. அல்லாஹ் நன்மையின் தரத்தினை மேலோங்கச் செய்வதற்கான வாய்ப்பினை தந்தருள்வானாக! இதன் மூலமாக நாம் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த பைஅத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக!

பாகிஸ்தான் சம்பந்தமான சில குறிப்புகளை எடுத்து வைத்திருக்கின்றேன். மார்ச் 23 -ல் பாகிஸ்தானில், பாகிஸ்தான் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானில் வசிக்கும் அஹ்மதிகளிடம் கூறுகின்றேன். துஆ செய்யுங்கள. எந்த நிலையில் நாடு செல்கிறதோ அது மிகவும் மோசமானது ஆகும். அல்லாஹ் அந்த நாட்டை பாதுகாப்பானாக! அஹ்மதிகளுக்காக அதனை காப்பாற்றுவானாக! ஏனென்றால் அஹ்மதிகள் அந்த நாடு பாதுகாப்பாக இருப்பதற்கு அதிகமாக துஆ செய்துள்ளார்கள். இருந்தபோதிலும் அவர்கள் குறை கூறிக் கொண்டுதான் வருகிறார்கள். எனவே இன்று சில உண்மைகளை எடுத்துரைப்பேன். இதில் அஹ்மதிகள் அந்த நாடு உருவாவதற்கு எந்த அளவு பங்களித்துள்ளார்கள் என்பது தெரிய வரும்.

தௌரே ஜதீத் என்ற பத்திரிகை 1923-ல் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபைப் பற்றி எழுதியுள்ளது. பஞ்சாப் கவுன்சிலின் அனைத்து முஸ்லிம்களும் உண்மையில் பஞ்சாப் முஸ்லிம்களின் பிரதிநிதியாக செயல்படுவதற்கு தகுதியான உரிமையைக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் பஞ்சாப்

சார்பாக ஆதாரப்பூர்வமான பிரதிநிதி ஒருவர் இங்கிலாந்திற்குச் செல்ல வேண்டும் என்ற தேவையை உணர்ந்த போது, ஜனாப் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் மீது தேர்வுக் குழுவின் பார்வை பட்டது. அதன்படி சவுத்ரி சாஹிப் தனது பணத்தை செலவழித்து இங்கிலாந்து சென்று மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் ஆங்கிலேய அரசிடமும், அரசியல் தலைவர்களிடமும் விஷயங்களை எடுத்து வைத்தார்கள். இதற்குப் பலன், பஞ்சாபைச் சேர்ந்த முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் அரசாங்கத்திடமும் போதுமான அளவு தாக்கம் ஏற்பட்டது.

இந்த சம்பவங்களை இந்த பிரகாசமான உண்மைகளை பத்திரிகை உலகைச் சார்ந்த எவரும் எப்போதும் மறுக்கமாட்டார்.

அடுத்து, இங்கிலாந்தில் சிறந்து விளங்கிய மனிதர் மவ்லானா முஹம்மது அலி ஜோஹர் சாஹிப். இவர்கள் தமது ஹம்தாத் என்ற பத்திரிகையில் செப்டம்பர் 1927-ல் எழுதுகிறார். இந்த வரிகளில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது மற்றும் அவர்களின் அமைப்பைப் பற்றி கூறவில்லையென்றால் அது நன்றிகேடாகி விடும். அவர்களது முழு கவனத்தையும் எந்தவித கொள்கை பாகுபாடுயின்றி அனைத்து முஸ்லிம்களின் நன்மைக்காக அர்ப்பணம் செய்து விட்டார்கள். மேலும் இஸ்லாத்தின் இந்த அமைப்பினரின் செயல்முறைகள், பொதுவாக இஸ்லாத்திற்கும், பிஸ்மில்லாஹ் உடைய கோபுரத்தில் உட்கார்ந்து கொண்டு இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதாக கூச்சலிடக்கூடிய ஒன்றுமற்ற வாதங்களை கொண்டவர்களுக்கு குறிப்பாகவும் வழிகாட்டுதலாக அமையக்கூடிய காலம் வெகுதொலைவில் இல்லை. அதாவது மவ்லவி முஹம்மது அலி ஜோஹர் சாஹிப் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் செயல்களைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் முஸ்லிம் பிரிவுகளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை இணைக்கிறார்கள். ஆனால் இன்று பாகிஸ்தானின் வரலாற்றிலிருந்து அஹ்மதிகளின் பெயர்களை நீக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரலாற்று அடிப்படையிலும் பொதுவாக முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்வதில்லை.

இதனைப்போன்று ஒரு வயதான இலக்கியர் காஜா ஹஸன் நிஸாமி வட்டமேசை மாநாட்டைப் பற்றி எழுதுகிறார்: வட்டமேசை மாநாட்டில் ஒவ்வொரு இந்துவும், ஒவ்வொரு முஸ்லிமும் மற்றும் ஒவ்வொரு ஆங்கிலேயரும் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடைய திறமையை ஒப்புக்கொண்டார்கள். மேலும் கூறினார்கள்: முஸ்லிம்களில் வீணான தேவையில்லாத பேச்சுக்களை பேசாத மேலும் புதிய காலகட்டத்தில் அரசியல் சிக்கல்களை நன்றாக புரியக்கூடியவர் ஒருவர் உண்டு என்றால் அது சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஆவார்.

(முனாதி பத்திரிகை. அக்டோபர் 24, 1934ல் வெளிவந்துள்ளது. ஆதாரம்: பாகிஸ்தானின் முன்னேற்றம் மற்றும் அஹ்மதிய்யத்)

பிறகு ஆஷிக் ஹுஸைன் பட்டாலவி சாஹிப் எழுதுகிறார்: வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட முஸ்லிம்களில் மிக அதிகமாக வெற்றி பெற்றது. ஆகா கான் மற்றும் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் ஆவார்கள்.

இது ஒரு நூல் ஆகும். இதன் பெயர் இக்பாலின் கடைசி இரண்டு வருடங்கள் ஆகும். இதுவும் நாஸிர் இக்பால் அகாடமி பாகிஸ்தானைச் சேர்ந்ததாகும்.

பிறகு ஹஸ்ரத் காயிதே ஆலம் (முஹம்மது அலி ஜின்னா) இந்தியா திரும்பி வருவதைப் பற்றி கூறுகையில், அவரே கூறுகின்றார்:

எனக்கு இந்தியாவிற்கு எந்த உதவியையும் செய்ய முடியாது எனத் தோன்றுகிறது. இவர் இந்தியாவை விட்டு இங்கிலாந்து சென்றிருந்தார். மேலும் என்னால் இந்துக்களுடைய எண்ணங்களில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியாது என்றும், என்னால் முஸ்லிம்களின் கண்களை திறக்கவும் முடியாது என்றும் இறுதியில் இலண்டனிலேயே வசிப்பதற்கு முடிவு செய்து விட்டேன் என்றார்.

இது ரயிஸ் ஜாபிர் சாஹிப் என்ற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த சமயத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அவரை திரும்ப கொண்டு வருவதற்கு முயற்சிகளைச் செய்தது. ஹஸ்ரத் இரண்டாவது

கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இலண்டன் மஸ்ஜித் இமாம் மவ்லானா அப்துர் ரஹீம் தர்த் சாஹிபை அனுப்பி காயிதே ஆலம் சாஹிபிற்கு அழுத்தம் கொடுங்கள். இவர் திரும்ப வர வேண்டும். மேலும் முஸ்லிம்களுக்கு வழிகாட்ட வேண்டும். இதன் மூலம் அவர்களது உரிமை அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்றார்கள். கடைசியில் காயிதே ஆலம் இந்தியா திரும்பி வந்தார். மேலும் முஸ்லிம்களுக்கு தொண்டாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்தார். அவர் மிகவும் வெளிப்படையாக இதனைக் கூறினார்.

Eloquent peruassion of the Imam left me with no escape. அதாவது, இலண்டனிலுள்ள இமாம் மஸ்ஜித் அவர்களின் மிகவும் ஆழமான நுண்ணிய கருத்துக்களைக் கொண்ட அறிவுரை எனக்கு தப்பிப்பதற்கான எந்த வழியினையும் விட்டு வைக்கவில்லை.

அடுத்து பிரபல்யமான பத்திரிகையாளரான ஜனாப் முஹம்மது ஸபி எழுதுகின்றார்:

Mr. லியாகத் அலி கான் மற்றும் Mr. அப்துர் ரஹீம் தர்த் இமாம் மஸ்ஜித் இலண்டன் ஆகியோர்தான் Mr. முஹம்மது அலி ஜின்னா உடைய எண்ணத்தை மாற்றியது. தனது நாட்டிற்கு திரும்பி சமுதாயத்தின் நலனுக்காக பாடுபடச் செய்தது. இதன் விளைவாக Mr. முஹம்மது அலி ஜின்னா 1934 ல் இந்தியா திரும்பி வந்தார். தலைமையக அஸெம்ப்ளி தேர்தலில் போட்டியின்றி தேர்வானார். (ஆதாரம்: பாகிஸ்தான் டைம், 1981, 11 செப்டம்பர்) மிகப்பெரிய எதிரிகளும் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர். அதாவது முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த மஜ்லிஸே அஹ்ரார் மிர்ஸாயியோன்கி ஆன்க் மச்சோலி பர் முக்தஸிர் தப்ஸரா என்ற தலைப்பில் ஒரு சிறிய புத்தகத்தை 1946ல் வெளியிட்டார்கள். அதில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. Mr. ஜின்னா கொயிட்டாவில் உரை நிகழ்த்தினார். மிர்ஸா மஹ்மூது உடைய பாலிசி முஸ்லிம் லீக்கை ஆதாரிப்பதைப் பற்றி இருந்தது. அதனை பாராட்டினார். பிறகு சென்ட்ரல் உஸ்தாவுடைய தேர்தல் நடந்த போது அனைத்து மிர்ஸாயிகளும் முஸ்லிம் லீக்கிற்கு ஓட்டு போட்டனர்.

அடுத்து, மிகவும் பிரபல்யான அஹ்லே ஹதீஸ் ஆலிம் மவ்லவி மீர் இப்ராஹீம் சியால்கோட்டி தனது நூல் பயாகாமே ஹிதாயத் வ காயிதே பாகிஸ்தான் வ முஸ்லிம் லீக்கில் எழுதுகிறார்:

அஹ்மதிகள் இஸ்லாமிய கொடியின் கீழ் வருவது உண்மையில் முஸ்லிம் லீக் மட்டுமே முஸ்லிம்களுடைய ஒரே பிரதிநிதியான ஜமாஅத் ஆகும் என்பதற்கான ஆதாரம் ஆகும். பார்வையில் அஹ்மதிகள் முஸ்லிம்களும் ஆவார் மற்றும் பாகிஸ்தானுக்காக மிகப்பெரிய பணியை செய்துள்ளவர்களும் ஆவர்.

அடுத்து பவுண்டரி கமிஷன் முன்பு சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஆற்றிய தொண்டுகளை ஹமீத் நிஸாமி சாஹிப் நவாயே வக்த் பத்திரிகையின் ஸ்தாபகர் எழுதுகிறார். இன்றைய காலத்தில் இது ஜமாஅத்திற்கு எதிராக பல விஷயங்களை எழுதி வருகிறது. உலக இலாபங்களை இவர்கள் பார்க்க ஆரம்பித்து விட்டனர். எவ்வாறாயினும் இதன் ஸ்தாபகர் ஹமீத் நிஸாமி எழுதுகிறார்.

ஹத் பந்தி கமிஷனுடைய கூட்டம் முடிந்தவுடன், ஏறக்குறைய நான்கு நாட்கள் முஸ்லிம்கள் சார்பாக சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் மிகவும் அழகிய செரிவுடன் மிகவும் அறிவுப்பூர்வமான விவாதம் செய்தார்கள். வெற்றியினை அளிப்பது இறைவன் ஆவான். எந்த அளவுக்கு செரிவுடன் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் முஸ்லிம்களின் வழக்கை விவாதித்தார்கள் என்றால், இதன் மூலம் முஸ்லிம்களுக்கு எந்த அளவு நிம்மதி கிடைத்தது என்றால், அவர்கள் சார்பாக உண்மை மற்றும் பொய் பற்றிய விஷயங்கள் மிகவும் அழகிய முறையில் அதிகாரம் படைத்த நபர்கள் வரை எட்ட வைக்கப்பட்டு விட்டது. சர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிபிற்கு வழக்கு தயார் செய்ய மிகவும் குறைந்த நேரம் மட்டுமே கிடைத்தது. ஆனால் தனது நல்லொழுக்கம் மற்றும் தகுதியின் மூலம் தனது கடமையை மிகவும் அழகான முறையில் நிறைவேற்றினார்கள். மேலும் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. பஞ்சாபில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் எந்தவித கொள்கை பாகுபாடின்றி அவர்களுடைய இந்த பணிக்கு நன்றி உடையவர்களாக விளங்குவார்கள்.

அடுத்து 1953ல் குழப்பம் ஏற்பட்ட போது, கோர்ட்டில் ஜமாஅத்தின் வழக்கு போடப்பட்டது. ஜஸ்டிஸ் முனீர் கான் நீதிபதியாக விளங்கினார். எழுதுகின்றார்:

அஹ்மதிகளுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. பவுண்டரி கமிஷன் தீர்ப்பில் குர்தாஸ்பூர் மாவட்டம் இந்தியாவில் இதற்காக தான் இணைக்கப்பட்டது. அதாவது அஹ்மதிகள் சிறந்த முறையில் செயல்பட்டார்கள். சர் ஸஃபருல்லாஹ் கான் அவர்களை காயிதே ஆலம் முஸ்லிம் லீக் உடைய வழக்கை நடத்துவதற்காக நியமித்தார்கள். அதில் சிறப்பான ஆதாரங்களை அன்னார் வைத்தார்கள். ஆனால் இந்தக் கோர்ட்டில் நீதிபதி ஜஸ்டிஸ் முனீர் அப்போதைய பவுண்டரி கமிட்டி உடைய உறுப்பினராக இருந்தார். இந்த அளவு சவுத்ரி சாஹிப் சம்பவத்தில் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி செலுத்துவதை தனது கடமையாக கருதுகிறேன். இதன் உண்மைத்தன்மை பவுண்டரி கமிஷனின் காகிதங்களில் வெளிப்படையாக உள்ளது. எவருக்கு இந்த சம்பவங்களைப் பற்றிய ஆர்வம் இருக்கிறதோ அவர் தாராளமாக இந்த ரிக்கார்டை பார்க்கலாம் என எழுதியுள்ளார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் முஸ்லிம்களுக்கு எந்த வித பிரதிபலனும் எதிர்பாராமல் சேவை செய்தார்கள். இருந்தும் கூட சில ஜமாஅத்துகள் நீதிமன்றங்களில் அன்னாரைப் பற்றி கூறிய விஷயங்கள் வெட்கத்திற்கு உரியதாகும். நன்றி கெட்டதற்கு ஓர் உதாரணமாகும். இந்த வெட்கக்கேடான நன்றி கெட்ட தன்மை, அதிக அளவு அரசியல், ஜமாஅத்துகளில் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. மேலும் நாட்டின் நிலைமையும் வெளிப்படையாக தெரிகிறது. எனவே இன்றைய தினத்தையொட்டி அஹ்மதிகள் தனது நாடான பாகிஸ்தானுக்காக துஆ செய்யுங்கள். இது எந்த அழிவின் பக்கம் முன்னேறிக் கொண்டிருக்கிறதோ அதிலிருந்து அல்லாஹ் இதனை பாதுகாப்பானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 23.03.2012

Translated by : Maulavi N. ZIAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456